**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 09.09.2021–ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு சிறப்புக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : **09.09.2021**

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் சட்டப் பேரவை அறிவிப்பு 2021–22–இல் நகராட்சி தினசரி அங்காடி (Daily Market) மேம்பாடு செய்ய ரூ. 350.00 இலட்சத்தில் மேற்க்கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, திருவள்ளுவர் தெருவில் ஏற்கனவே உள்ள தினசரி சந்தையினை மேம்பாடு செய்து புதிய வடிவமைப்புடன் தினசரி அங்காடிகள் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** ரூ. 350.00 இலட்சம் மதிப்பீட்டிலான நவீன தினசரி அங்காடி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(3472/21/இ1)

**தீர்மானம் எண். 1089**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் சட்டப் பேரவை அறிவிப்பு 2021–22–இல் நகராட்சி பூங்கா மேம்பாடு செய்ய ரூ. 50.00 இலட்சத்தில் மேற்க்கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சி, வார்டு எண். 8 வீட்டு வசதி வாரியத்தில் உள்ள பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டிலான பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(3472/21/இ1)

**தீர்மானம் எண். 1090**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சி. கிருபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி.